1986 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(ஆ) 1986–87 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளியில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மையம் நிறுவும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

அறிவியல் பூங்காக்கள்.

576 —(*வினா எண். 6257) திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்தில் தற்போது எங்கெங்கு அறிவியல் பூங்காக்கள் உள்ளன ?

(ஆ) அவைகளை மேலும் விரிவாக்கும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) எங்கும் இல்லை.

(ஆ) மத்திய அரசின் தேசிய அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் தொழில் முனைவர்கள் வளர்ச்சி வாரியம் இந்திய தொழில் முன்னேற்ற வங்கி போன்ற நிதி நிறுவனங்களின் உதவியுடன் தமிழ் நாட்டில் மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தொழில் நுட்ப நிறுவனங்களின் வளாகத்தில் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் தொழில் முனைவர்கள் பூங்காக்களை அமைக்க ஆலோசித்து வருகிறது.

பென்னாகரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் படுக்கை வசதிகள்.

577 —(*வினா எண். 2227) —திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பென்னாகரம் வட்டம், பென்னாகரத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை படுக்கை வசதியுடன் விரிவுபடுத்த அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இல்லை.

திரு. எச். ஜி. ஆறுமுகம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்திலே பென்னாகரம் தாலுக்காவாகி சுமார் 8 ஆண்டுகளுக்கு மேலாகின்றது. அங்கே ஆரம்பச் சுகாதார நிலையம் மட்டும் தான் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 1984-வது ஆண்டு அங்கே வந்தார்கள் பென்னாகரம் நகரத்திலே 20,000 மக்கள் தொகை உள்ளனர்.

அங்கு ஒரு அரசு மருத்துவமனை அமைக்கப்படுமா? இல்லையென்றால், ஆரம்பச் சுகாதார நிலையத்தை, 20 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையாக அப்கிரேட் செய்ய அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு தலைவர் அவர்களே, பென்னாகரத்தைப் பொறுத்த அளவிலே, இப்பொழுது தாலுக்காவாக்கப் பட்டிருக்கக்கூடிய காரணத்தால், அங்கே ஒரு தாலுக்கா மருத்துவமனை தேவை என்கிற கோரிக்கை நியாயமான கோரிக்கை. இப்பொழுதிருக்கிற ஆரம்ப சுகாதார நிலையத்தை, மேம்படுத்தி ஆரம்ப சுகாதார நிலையமாக ஆக்குவதா இல்லாவிட்டால், தாலுக்கா மருத்துவ மனையாக ஆக்குவதா என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்து, உரிய நேரத்தில், தக்க முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எச். ஜி. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, பொன்னாகரம் வட்டத்திலே சுமார் 30 கிலோமீட்டர் அளவுக்கு எந்தவிதமான ஆரம்ப சுகாதார நிலையமோ அல்லது வேறு சுகாதார நிலையமோ இல்லை. இருக்கிற ஆரம்பச் சுகாதார நிலையத்திலே போஸ்ட் மார்ட்டம் செய்ய வசதி இல்லை. அப்படிச் செய்ய வேண்டுமென்றால், 30 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள தர்மபுரி அரசு மருத்துவமனைக்குப் போக வேண்டிய நிலை உள்ளது. அதையெல்லாம் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கவனித்து, பென்னாகரம் நகரத்திற்கு உடனடியாக அரசு மருத்துவ மனை ஏற்பாடு செய்து தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–40)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி இது நியாயமான கோரிக்கை. பரிவுடன் கவனிக்கப்படும்.

தாம்பரம் மருத்துவமனையை விரிவுபடுத்தல்.

578 —(*வினா எண். 2758) திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் மருத்துவமனையில் கூடுதலாக மருத்துவர்களை நியமிக்க அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் யாது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) மற்றும் (ஆ) தாம்பரம் அரசு மருத்துவமனையில் சிறப்புச் சிகிச்சைப் பிரிவு துவங்க ஏதுவாக உதவி அறுவை மருத்துவரும் மற்றும் இதர பணியிடங்களும் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.